## பொரலெஸ்கமுவ நகர சபை
## கொழும்பு மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூலை 24 திகதியும் சபை தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பொரலெஸ்கமுவ நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறானநிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | உள்ளூராட்சி திணைக்களத் (மே.மா) தினால் கொள்வனவு செய்து சபைக்கு வழங்கியிருந்த கம்பெக்டர் வண்டிக்காக முத்திரை வருமானத்தில் இருந்து மாதாந்தத் தவணை ரூபா 390,000 வீதம் 03 தவணைகள் அறவிடப்பட்டு மீதியான முத்திரைக் கட்டணம் என ரூபா 38,830,000 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ரூபா 1,170,000 தொகை முத்திரை வருமானம் குறைவாகக் கணிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | 2018 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 662,257 தொகை பெறுமதிய ான தளபாடங்கள் மற்றும் 9 உபகரண விடயங்களை கணக்கீடு செய்யாமையால் நிலையான சொத்துக்கள் அந்தப் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 1999 முதல் 2014 வரை நன்கொடையாகக் கிடைத்திருந்த 05 வாகனங்களின் பெறுமதியை, பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | நன்கொடைச் சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். 226-2026 இலக்கங் கொண்ட கம்பெக்டர் வாகனம் மொரட்டுவ நகர சபைக்கு கிடைத்த வாகனம் ஒன்றாக காணப் பட்டதுடன் எதிர்காலத்தில் நகர சபைக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) நிகழத்தக்க பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிகழத்தக்க பொறுப்புக்கள் என ரூபா 76,850 காட்டப்பட்டிருந்த போதும் வழக்குகள் தொடர்பான விபரங்கள் மற்றும் தற்போதைய நிலைமை கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்களின் தற்போதைய வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாக 2011 ஆண்டிற்கு முன்னர் இருந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த துடன் 2006 முதல் இறுதிக் கணக்குகளில் மாத்திரம் இந்தத் தொகை காட்டப்படுகின்றது. |

### (இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அவற்றின் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில்/ அறிக்கை களில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்ய போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,676,487 தொகை மிகையாகக் காட்டப் பட்டிருந்தது. | குறிப்பிட்ட மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் பலவின வைப்புக்கள், நிலுவைக் கடை வாடகை, வியாபார வரி கடன்பட்டோர் மற்றும் ஊழியர் கடன் என்பவற்றை சரிசெய்வேன். |

### (உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிகழக்கூடிய பொறுப்புக்கள் ரூபா 76,850 தொகைக்காக அட்டவணைகள் மற்றும் முற்கொடுப்பனவு முற்பணங்கள் ரூபா 10,000 தொகைக்காக பற்றுச்சீட்டுக்களும் வீதி விளக்குத் தூண்கள் முறைசார் விதமாக இலக்கம் இடப்பட்டு அது தொடர்பான விபரங்கள் காட்டக்கூடிய பதிவேடொன்றும் நகர சபைக்குச் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவத ற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

சொந்தமான 03 மயானங்களின் விளைச்சல் பரப்பு மற்றும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக காணி உறுதிகள், காணி வரைபுகள் சாட்டுதல்கள் அல்லது கொள்வனவு செய்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

**1.4 இணக்கமின்மை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் தாபனக் கோவை | | | |
| | அத்தியாயம் XLVII பிரிவு 8.1 மற்றும் 8.2 | கடன் மீதிகளை தீர்க்காத உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | அத்தியாயம் XLVII பிரிவு 8.1 மற்றும் 8.2 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| i. | நி.பி. 571 | 02 வருடங்களை மிகைத் துள்ள ரூபா 1,271,287 இற்கான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| ii. | 880,881,891(1) மற்றும் அரசாங்க உத்தி யோகத்தர்களுக்கான பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரம் | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத் தர்களிடம் பிணை வைப்புக்கள் பெற்று இருக்காததுடன் பிணைப் பதிவேடு ஒன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | 880,881,891(1) மற்றும் அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான பிணைக்கட்டளைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆண்டில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| iii. | நி.பி. 1646 | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நி.பி. 1646 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) ஏனைய சுற்றறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 ஜூலை 11 திகதிய WP/LGD/01/2012 இன் பந்தி XXI | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மீட்புகள் தொடர்பாக காலாண்டு அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் அறிக்கை தயாரிப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 39,245,030 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 67,215,767 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் ரூபா 000’ | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000’ | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000’ | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா. 000’ | மதிப்பீட்டு வருமானம் ரூபா 000’ | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000’ | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000’ | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 000’ |
| வீதவரி மற்றும் வரி | 26,525 | 25,772 | 22,760 | 16,872 | 26,700 | 24,829 | 12,364 | 12,465 |
| வாடகை | 1,961 | 990 | 1,042 | 178 | 1,426 | 935 | 800 | 135 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 702 | 2,041 | 2,118 | 202 | 512 | 377 | 377 | - |
| ஏனைய வருமானங்கள் | 48,431 | - | 51,962 | 2,026 | 47,027 | 37,640 | 6,144 | 31,496 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடல் ரூபா 25,771,666 தொகை எனினும், அவற்றில் ரூபா 10,805,622 தொகை அதாவது 41.93 சதவீதம் ஆண்டின் போது அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சிட்டையிடல்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர் மூலமாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு வீதவரி கடன்பட்டோர் மீதி ரூபா 13,973,105 தொகை எனினும் அவற்றில் ஆண்டின் போது ரூபா 6,892,052 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 16,871,802 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 50,000 இனை மிகைத்துள்ள நிலுவை வீதவரி அலகுகள் 10 இற்காக ரூபா 668,081 இற்கான தொகை அறவீடு செய்திருக்க வில்லை. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். அறவீடு செய்ய வேண்டி இருந்த தொகை ரூபா 349,810 ஆகும். 02 பதிவழிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் தொகை ரூபா 121,865 ஆகும். 02 பதிவழிப்பதற்காக அனுப்ப வேண்டியுள்ளது. அதன் பெறுமதி ரூபா 144,977 ஆகும். 01 அறவிடப் பட்டுள்ளது. அதன் பெறுமதி ரூபா 51,429 ஆகும். |
| (ஈ) | ஆதனங்களை 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2009 ஆண்டின் பின்னர் ஆதனங்களுக்கான பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தர் களுக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளதுடன் அவர்களின் தாமதம் இதனை தாக்கியுள்ளது என குறிப்பிடுகிறேன். |
| (உ) | ரூபா 193,407 தொகைக்கான அறவிடப்பட முடியாதிருந்த வீதவரித் தொகையை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பரிந்துரைத்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இது வரை கிடைத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். சபையின் அங்கீகாரத்துடன் மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கிறேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடை வாடகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 02 இன் பிரகாரம் வாடகை செலுத்துதல் ஒரு மாதத்தை விட மிகைக்கும் இடத்து கடைகளின் உரிமையை இழக்க நேரிடும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 12 கடைகளில் இருந்து 03 முதல் 15 மாதங்கள் வரை ரூபா 147,433 இற்கான கடை வாடகை அறவிடப்பட்டு இருக்காத போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் படி செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். கடை உரிமையாளர்களை அறிவுறுத்திய போதிலும் இது வரை ரூபா 98,775 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 12 மற்றும் 1980 திசெம்பர் 31 திகதிய மற்றும் 1980/46 இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு முறை கடை வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும் 2009 ஆண்டின் பின்னர் கட்டணத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அல்லது உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் மற்றும் சுற்றறிக்கை யின் படி செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | நிபந்தனை இலக்கம் 22 இன் படி வாடகைக்கு பெறுபவர் கடையையோ அல்லது ஒரு பகுதியையோ வேறு ஒருவருக்கு விற்பனை செய்தல், சாட்டுதல், துணை வாடகைக்கு கொடுத்தல் அல்லது அங்கீகாரம் இன்றி வெளியேறுதல் கூடாது எனினும் 15 கடைகள் துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் நிபந்தனையின் படி செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் கடை உரிமையாளர்களை அறிவுறுத்தி சரி செய்வேன். |
| (ஈ) | மூடப்பட்டிருந்த 02 கடைகளில் இருந்து ரூபா 76,793 நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டிய துடன் 06 மாதங்கள் கடந்தும் அறவிட்டிருக்காததுடன் நிலுவையை முன்கொண்டு இருக்கவில்லை. | நிலுவை வாடகை முன்கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். பதிவு செய்யும் போது ஏற்பட்டிருந்த தவறை சரி செய்கின்றேன். 9 ஆம் இலக்க கடைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 189,400 இற்கான நிலுவை வியாபார வரி மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு முடியாது இருந்தது. | நிலுவை வியாபார வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | ரூபா 36,000 இற்கான நிலுவை வரி அறவீடு செய்வதற்காக 39 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் நடைமுறை ஆண்டு வரை நிலுவை வரி அறவிட்டிருக்க வில்லை. | நிலுவை வியாபார வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். இந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்குத் தீர்ப்பு வரும் வரை அறவீடு செய்ய முடியாதுள்ளது. |

**2.2.5 முத்திரைக் கட்டண வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை ஆண்டின் முத்திரைக் கடன்பட்டோர் என ரூபா 10,000,000 தொகை மாத்திரம் நடைமுறைச் சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். கணக்கீடு செய்யும் போது தவறொன்று ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அதனை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | நுகேகொட தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2015 ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 53,341,324 தொகை என இனங்கண்டிருந்த போதிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டிருக்க வில்லை. | 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக் கான பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் இனங் காணப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். 2016 இன் 06 மாதங்களுக்கான முத்திரைக் கட்டணம் தற்போது இனங்காணப் பட்டுள்ளது. |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (இ) | கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2015 செப்தெம்பர் வரையும் அவிஸ்ஸாவெல்ல காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2015 ஆகஸ்ட் வரையும் முத்திரைக் கட்டணம் கிடைத்திருந்த போதிலும் அதன் பின்னர் வருமானம் கிடைத்திருக்கவில்லை. | முத்திரைக் கட்டண வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். சுமார் 99% தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு உடையதாகக் காணப்பட்ட துடன் அவிஸ்ஸாவல அலுவலகத்தில் இருந்து முத்திரைக் கட்டண பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு அனுப்பப் படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பதவியணிக்காக வருடாந்தம் பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் அமுல் நடவத்துவதற்காக ரூபா 150,000 வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் உத்தியோகத்தர் எவருக்கும் பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் களுக்கு வருடாந்தம் பயிற்சி வழங்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வகைப்படுத்தப்படாத குப்பை 7,815.82 தொன்கள் அதாவது மொத்தக் குப்பை எண்ணிக்கையின் 72 சதவீதம் ஆகக்க காணப்பட்டதுடன் குப்பை சேகரித்தல் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப் படாமையால் பலவினக் கழிவுப் பொருட்களுக்காக ரூபா 7,280,468 தொகை செலுத்த நேரிட்டிருந்தது. | குப்பை சேகரித்தல் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் குப்பைகளை வகைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். தற்போது 40% வரை குறைந்துள்ளது. |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ii) | குப்பை முகாமைத்துவ செயற் திட்டத்தின் மூலம் ரூபா 50,000 இற்கான வருமானம் ஒன்று வருடாந்த பாதீட்டின் மூலம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தச் செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் செயற்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நூலகப் புத்தக கணிப்பீட்டின் போது சேர்வுப் பதிவேட்டில் காணப்பட்ட சமர்ப்பிக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 673 தொகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இது இரண்டு மடங்காகும். | கணிப்பீட்டிற்காக அனைத்து புத்தகங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். மீண்டும் கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | நூலகம் ஒன்றிற்கு பொருத்தமான சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தாமல் புதிய நூலக கட்டிடத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருந்தமையால் வாசகர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதுடன் வாசகர்களுக்கு உச்ச மட்ட உற்பத்தித் திறன் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்ததென அவதானிக்கப்பட்டது. | நூலகம் நிறுவும் போது பொருத்தமான சுற்றாடல் மற்றும் வாசகர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் வெற்றிடங்கள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிரேஷ்ட மட்டத்தில் 02 பதவி களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதினால் சபையின் அலுவல்களை வினைத்திறனுடன் மற்றும் உற்பத்தித் திறனுடன் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் வெற்றிடங்கள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | ஓய்வு பெற்ற அல்லது இடமாற்றம் பெற்ற மூன்று உத்தியோகத்தர் களுக்கு வழங்கியிருந்த ரூபா 13,896 தொகைக்கான கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்மீதி தீர்க்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாள ருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | சேவையை வரிதாக்கிய 03 உத்தியோகத்தர்களின் விழா மற்றும் விஷேட கடன் மீதிகள் ரூபா 23,100 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 338,592 இற்கான இடர்கடன் மீதிகள் பிணையாளர் களிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடனை பெற்றவர்கள் கடன் செலுத்துவதை பகிஷ்கரிக்கும் சந்தர்ப்பங்களில் பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டு உத்தியோகத்தர் களின் பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். அடுத்த உத்தியோகத்தர் களுக்கு பிணையாளர்களை சமர்ப்பிக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டது. |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டின் போது காணித் துண்டு மற்றும் கட்டிட வரைபுகளுக் காக 1031 விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டிருந்த போதிலும் 210 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. | பொது மக்கள் சேவை விரைவாக நிறைவேற்ற பொறுப்பாக இருக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆண்டில் உரிய நடவடிக்கை மேற்கொள்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட வரைபுகள் மற்றும் கட்டிட பிரமாணங்கள் 2008-2020 இன் 14(1) அ ஆகிய துணைப் பிரிவுகளின் படி வரைபுகள் அங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து எட்டு (08) வாரங்களுக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டிட வரைபுகள் அங்கீகரித்தல் 102-228 நாட்கள் இடைப்பட்ட காலவீச்சு ஒன்று காணப்பட்டது. | வரைபுகள் மற்றும் கட்டிடப் பிரமாணங் களுக்கு இணங்க செயற்படுவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். விண்ணப்பங்களின் குறை பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக விண்ணப்பதாரிகள் வருவதில் தாமதம் காணப்படல் இதற்கு காரணமாக இருப்பதுடன் எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 480,237 தொகை பெறுமதியான 07 வகையான பொருட்கள், பொருட் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. | பொருட் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். பதிவேட்டில் பதிவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மினி கம்பெக்டர் வாகனத்திற்கு புதிதாக தொட்டி ஒன்று, சட்டகம் மற்றும் வர்ணம் தீட்டுவதற்காக ரூபா 1,210,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் பொருத்தப்பட்டிருந்த தொட்டி ஒட்டு போடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த பழைய தெட்டி ஒன்றாகும். | வேலைகள் மற்றும் சேவைகள் விரைவாக செயற்திறனுடன் உரிய நியமத்துடன் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். பணம் செலுத்தப்படாமல் மீண்டும் திருத்த வேலை மேற் கொள்ளல் தற்போது நடைபெறுகின்றது. |

### 3.5.3 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலம் முதல் சிதைவுற்ற நிலையில் காணப்பட 02 வாகன ங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர் காலத்தில் ஏல விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்வேன். |

**3.5.4 வருடாந்த பண்ட/ இருப்புக் கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் பயன்படுத்த முடியாது இருந்த ரூபா 104,181 தொகை பெறுமதியான பண்டங்களின் ஏல விற்பனை செய்வதற்கு பரிந்துரைத்துள்ள போதிலும் அவ்வாறு செய்திருக்க வில்லை. | ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.5 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்காக மதிப்பீடுகள் தயாரிக்கும் போது பாதைக் கட்டண அட்டவணை (HSR) பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி மேல் மாகாண பிரதான செயலாளரின் 2018/2019 ஆண்டு களுக்காக அந்தக் கட்டணம் திருத்தப்பட்டிருந்த போதிலும் திருத்துவதற்கு முன்னர் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த 4 செயற்திட்டங்களின் மதிப்பீட்டிற்காக திருத்திய கட்டணம் பயன்படுத்தப் பட்டு கொடுப்பனவு செய்யப் பட்டிருந்தது. | பாதைக் கட்டணம் திருத்தப்பட்ட நாட்களின் படி மற்றும் செயற்திட்ட நாட்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். 2018.04.11 முதல் நடை முறைப்படுத்தப்பட்ட பாதை கூறுவிலைகள் பதிவேட்டின் படி அலகுக்கான விலை பயன்படுத்தப்பட்டது. |
| (ஆ) | ரூபா 1,612,387 தொகை செலவிடப் பட்டு 03 தனியார் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் சபைக்கு உரித்தாக்கல் தொடர்பாக 2018 பெப்ரவரி 20 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 செப்தெம்பர் 18 திகதியில் உள்ளவாறு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் சபைக்கு உரித்தாக்கப்பட்ட மொத்தப் பாதைகளின் எண்ணிக்கை 503 தொகையாக இருந்த போதிலும் அவற்றில் வர்த்தமானி இடப்பட்ட பாதைகளின் எண்ணிக்கை 491 தொகை ஆகும். | வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். புதிய 25 பாதைகளை சபைக்கு உரித்தாக்கிய பின்னர் ஒரே தடவையில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஈ) | கெஸ்பேவ பிரதேச செயலக வட்டாரத்தில் கடுவாவல நிலம்மஹர பிரதான பாதையில் ஆஸிரி உயனவில் 189 மீற்றர் தூரத்திற்கு பொதுவான துணைப் பாதை ஒன்று அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,196,483 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட பாதையில் இடையிடையே கிடங்குகள் தோண்டப்பட்டு கற்கள் மேற்பட்டிருந்தது. இரண்டாம் தடவை தார் பூசப்பட்டு என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | உச்ச மட்ட வினைத் திறனுடன் உற்பத்தித் திறனுடன் நிர்மாண வேலை நிறைவேற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். இரண்டாம் தடவை தார் பூசப்பட்டுள்ளதுடன் பிடிபணம் விடுவிக்கப்பட வில்லை. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது மக்கள் நலனோம்பு மற்றும் அத்தியவசிய அலுவல்களுக்காக 05 செலவு விடயங்களில் ஒதுக்கப் பட்டிருந்த ரூபா 3,431,000 இற்கான ஏற்பாடுகள் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆண்டின் போது மேற் கொள்ளப்படுகின்றது. |